
# உதயன்

சுடர் : 41
கதிர் : 195

செவ்வாய்க்கிழமை
09 ஜூன் 2026

வைகாசி 26 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## சாவகச்சேரியில் சருகுப்புலி!

யாழ்ப்பாணம், ஜூன் 9
சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுணாவில் மேற்குப் பகுதியில் பொதுமக்களின் குடியிருப்புக்குள் நுழைந்த »11

அராலியில்

## குடும்பத்தலைவர் சடலமாக மீட்பு!

### பொலிஸார் விசாரணை

யாழ்ப்பாணம், ஜூன் 9
யாழ்ப்பாணம் அராலி பகுதியில் இளம் குடும்பத் தலைவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப் »11



செம்மணிப் புதைகுழியில்

# பின்னிப் பிணைந்த நிலையில் ஏராளமான என்புத்தொகுதிகள்

### புதைகுழி மேலும் விரிவடைவு

யாழ்ப்பாணம், ஜூன் 9
யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழியில் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்த நிலையில் மிகவும் சிக்கலான முறையில் இருவேறு பகுதிகளில் ஏராளமான என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. »11

ஒருநாளில் அதிகபட்சமாக

## செம்மணியில் நேற்று 16 என்புத்தொகுதிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 9
யாழ்ப்பாணம் செம்மணி மனிதப்புதைகுழியில் நேற்று ஒரேநாளில் 16 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. செம்மணிப் புதைகுழிக்குள் இருந்து ஒரே நாளில் அதிகூடிய மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப் »11

## மடிந்திருக்கும் முழங்காலுடன் என்புத்தொகுதி அடையாளம்

யாழ்ப்பாணம், ஜூன் 9
யாழ்ப்பாணம் செம்மணிப் புதைகுழியில் இருந்து முழங்கால் மடிக்கப்பட்ட நிலையில் என்புத் தொகுதி அடையாளம் காணப்பட்டுள்ளது. »11

## நாகர்கோவில் கிழக்கில் கைக்குண்டொன்று மீட்பு



யாழ்ப்பாணம், ஜூன் 9
வடமராட்சி மருதங்கேணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகர்கோவில் கிழக்கு காட்டுப் பகுதியில் நேற்றுக் கைக்குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது.
நாகர்கோவில் கிழக்கு காட்டுப் பகுதியிலுள்ள பனை மரமொன்றின் கீழ் கைக் »11

## சாலேயின் விடயத்தில் விட்டுக்கொடுப்பு இல்லை

### அருட்தந்தை சிறில் காமினி உறுதி



கொழும்பு, ஜூன் 9
போரை முடிவுக்கு கொண்டுவர பங்களிப்பு வழங்கினார் என்பதற்காக, சுரேஷ் சாலேயின் தனிப்பட்ட குற்றங்களுக்கு விலக்கு வழங்க முடியாது இவ்வாறு அருட்தந்தை சிறில் காமினி தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
சுரேஷ் சாலே எனக்கு எதிராக இழப்பீடு »11

எத்தியோப்பியாவில்

## பணயம் வைக்கப்பட்ட இலங்கையர்கள் மீட்பு!

கொழும்பு, ஜூன் 9
எத்தியோப்பியாவில் சர்வதேச குற்றக்குழுவால் கடத்தப்பட்டு, பிணைக் கைதிகளாக சிறை வைக்கப்பட்டிருந்த இலங்கையர்கள் மூவர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர். எத்தியோப்பியாவில் பிணைக் »11

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தை எதிர்த்து மன்னாரில் போராட்டம்!

### நாளைமறுதினம் ஏற்பாடு



மன்னார், ஜூன் 9
பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிராகவும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ள பாடகர் சங்கீத்சனை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் மன்னாரில் நாளைமறு »11

## போதைப்பொருள்களுடன் 3 இளைஞர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 9
அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சிறுப்பிட்டி பகுதியில் போதைப்பொருள்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் »11

முல்லைத்தீவு

## உப்புமால் வீதியை உடன் விடுவிக்குக!

### ரவிகரன் எம்.பி. வலியுறுத்து



முல்லைத்தீவு, ஜூன் 9
2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் மூடப்பட்டுக் காணப்படும் முல்லைத்தீவு உப்புமால் வீதியை விடுவிப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வன்னி மாவட்ட »11



தேசியமட்ட கால்பந்தாட்டம்

## 18 வயதுப் பெண்கள் பிரிவில் மகாஜனக் கல்லூரி சம்பியன்!

யாழ்ப்பாணம், ஜூன் 9
பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கால்பந்தாட்டத் தொடரில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி சம்பியனானது.
கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில் குருநாகல் மலிய »11

முச்சந்தி முரளி

"இலங்கையில இருக்கிறது தான் பயம் எண்டு பார்த்தால் எதியோப்பியாவிலையும் பணயமாப் பிடிக்கிறாங்களே"

மக்கள் [illegible] நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|
| திகதி: 08.06.2026 | திகதி: 08.06.2026 | திகதி: 08.06.2026 | திகதி: 08.06.2026 | திகதி: 08.06.2026 | திகதி: 08.06.2026 | திகதி: 08.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம்: 4454 | சீட்டிழுப்பு இலக்கம்: 1521 | சீட்டிழுப்பு இலக்கம்: 0480 | சீட்டிழுப்பு இலக்கம்: 2560 | சீட்டிழுப்பு இலக்கம்: 6212 | சீட்டிழுப்பு இலக்கம்: 2242 | சீட்டிழுப்பு இலக்கம்: 0328 |
| ஆங்கில எழுத்து: Y | வெற்றி இலக்கினம்: மேஷம் | ஆங்கில எழுத்து: X | ஆங்கில எழுத்து: J | ஆங்கில எழுத்து: X | ஆங்கில எழுத்து: L | வெற்றி இலக்கினம்: கன்னி |
| | | | சுப்பர் இலக்கம்: 11 | | | |
| வெற்றி இலக்கங்கள்: 13 33 46 63 | வெற்றி இலக்கங்கள்: 13 22 35 59 | வெற்றி இலக்கங்கள்: 7 2 1 5 | வெற்றி இலக்கங்கள்: 07 08 21 35 | வெற்றி இலக்கங்கள்: 4 0 1 3 2 0 | வெற்றி இலக்கங்கள்: 12 24 61 62 | வெற்றி இலக்கங்கள்: 15 35 45 |
| விசேட எழுத்து: Y | | | | | விசேட எழுத்து: L | |

# சங்கீத்சனின் கைதைக் கண்டித்து வல்வெட்டித்துறையில் கனவீர்ப்பு!

**வல்வெட்டித்துறை, ஜூன் 9**

**பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள சொல்லிசைப் பாடகர் சங்கீத்சனை உடனடியாக விடுதலை செய்யக் கோரி, நேற்றுத் திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் வல்வெட்டித்துறை நகரப் பகுதியில் பிரதேச இளைஞர்களால் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**

"ஆட்சி மாறினாலும் காட்சிகள் மாறவில்லை", "NPP இன் ஏமாற்றுப் பாடலுக்குத் தடை இல்லையா?", "பயங்கரவாதத் தடைச்சட்டம் வேண்டாம்!" போன்ற சுலோகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு, கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமது கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இந்தப் போராட்டத்தில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் சி.வேந்தன் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-26)



## முதியவர்களின் சடலங்கள் அரச செலவில் அடக்கம்

கொழும்பு, ஜூன் 9

அங்குருவாதொட, படகொட பகுதியில் அமைந்துள்ள முதியோர் இல்லத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் உறவினர்களால் அடையாளம் காணப்படாது அல்லது உரிமை கோரப்படாது விடில், 14 நாள்களுக்குப் பின்னர் அரச செலவில் அடக்கம் செய்யப்படும் என்று துறைசார்ந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். விபத்தில் உயிரிழந்தவர்களின் 6 சடலங்கள் களுத்துறை, நாகொட போதனா மருத்துவமனையிலும், 7 சடலங்கள் ஹொரனை மருத்துவமனையிலும் வைக்கப்பட்டுள்ளன. உயிரிழந்தவர்களில் இதுவரை 7 பேரின் உடற்கூறாய்வுப் பரிசோதனைகள் நிறைவடைந்துள்ளன. அதேவேளை உயிரிழந்த முதியவர்களில் இருவரது சடலங்களைத் தவிர ஏனையவை அவர்களது உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-இ)

## சங்கீத்சனின் விடுதலைக்காக வவுனியாவிலும் போராட்டம்!

வவுனியா, ஜூன் 9

பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ள சொல்லிசைப் பாடகர் சங்கீத்சனை உடனடியாக விடுவிக்கக்கோரி வவுனியாவில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டமும் பேரணியும் முன்னெடுக்கப்பட்டது.


வவுனியா கலைஞர்களின் ஏற்பாட்டில், பழைய பேருந்து நிலையப் பகுதியில் இந்தப் போராட்டம் ஆரம்பமானது. இதில் அரசியல் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், கலைஞர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு தமது ஆதரவை வெளியிட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், "பாடுவதும் ஆடுவதும் பயங்கரவாதமா?", "கலைஞர்களுக்கும் கைவிலங்கோ?", "அமைச்சர் சந்திரசேகரன் சொன்னால் இனிக்கும், சங்கீத்சன் சொன்னால் புளிக்குதோ?" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோசங்களை எழுப்பினர். கருத்துச்சுதந்திரத்தையும் கலைஞர்களின் உரிமைகளையும் அரசாங்கம் மதிக்கவேண்டும் என வலியுறுத்திய போராட்டக்காரர்கள், கலைத்துறைமீதான இத்தகைய அடக்குமுறைகள் தொடர்பாகத் தமது கவலையை வெளியிட்டனர். பழைய பேருந்து நிலையப் பகுதியில் ஆரம்பித்த இந்தப் போராட்டப் பேரணி, மணிக்கூட்டுக் கோபுரச் சந்தி வரை சென்று, மீண்டும் ஆரம்பித்த இடத்தை வந்தடைந்து நிறைவுற்றது. (எ-110)

# போலிநாணயத்தாள்களுடன் பெண் உட்பட நால்வர் கைது!

கொழும்பு, ஜூன் 9

6 இலட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான போலி நாணயத்தாள்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண் ஒருவர் உள்ளிட்ட நால்வர், மத்திய குற்றப்புலனாய்வுப் பணியக அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கொழும்பு நகரின் முக்கியமான விடுதியொன்றில் தங்கியிருந்து, போலி வெளிநாட்டுப் பணத்தாள்களை விநியோகித்து வருகின்றனர் என்று மத்திய குற்றப்புலனாய்வுப் பணியகத்துக்குக் கிடைத்த தகவலையடுத்து, அந்த விடுதியை முற்றுகையிட்ட அதிகாரிகள் சந்தேகநபர்களைக் கைதுசெய்தனர். (க-இ)



**சுபிரி தன சம்பத**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 08.06.2026 | திங்கட்கிழமை | O | 8 4 2 8 5 3 | 0920 |

**Super Ball DLB**

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 08.06.2026 | திங்கட்கிழமை | 3186 | V | 18 20 30 57 |

**சனிதா DLB**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 08.06.2026 | திங்கட்கிழமை | Y | 07 34 42 45 | 5347 |

**SASIRI DLB**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 08.06.2026 | திங்கட்கிழமை | 1016 | 16 32 47 |

**லக்ன ராசி DLB**

| திகதி | தினம் | கடகம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 08.06.2026 | திங்கட்கிழமை | ♋ | 11 15 49 62 | 4898 |

**KAPRUKA DLB**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 08.06.2026 | திங்கட்கிழமை | S | 13 | 12 33 53 62 | 2362 |

**அத கோடிபதி DLB**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 08.06.2026 | திங்கட்கிழமை | P | 03 21 26 46 | 3012 |

## வடக்கின் வருவாயை அதிகரிக்க திணைக்களங்களுடன் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூன் 9

வடக்கு மாகாணசபையின் வருமான முன்னேற்றம் மற்றும் சவால்கள் தொடர்பான விசேட கலந்துரையாடல், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

மாகாணசபைத் திணைக்களங்கள் ஊடாக வருமானத்தைப் பெற வாய்ப்புகள் இருந்தும், ஒழுங்குபடுத்தி நடைமுறைப்படுத்துவதில் சவால்கள் நிலவுவதாகவும், சில இடங்களில் மாகாண வருமானம் இழக்கப்படுவதாகவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார். தவறுகளைத் திருத்தி, சரியான வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலமே மாகாண வருமானத்தை அதிகரிக்கமுடியும் என அவர் வலியுறுத்தினார்.

மாகாணம் மற்றும் மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படும் வருமானம் குறித்து பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) விளக்கமளித்தார். அதனைத் தொடர்ந்து, உள்ளூர் மதுபானத் தவறணை வாடகை, நீதிமன்ற முத்திரைத் தீர்வைகள், கனிமப் பொருள் வரிகள், அடகு பிடிப்போர் கட்டணங்கள் மற்றும் வியாபாரப் பெயர்ப் பதிவுக்கான கட்டணங்கள் மூலமாகக் கிடைக்கும் வருமானங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

மாகாணக் காணித் திணைக்களத்தின் நீண்டகாலக் குத்தகை மற்றும் வருடாந்த அனுமதிப்பத்திர வருமானங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. (க-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சனத்தொகைக் குறைவால் முல்லைத்தீவுக்கு ஆபத்து!

## ரவிகரன் எம்.பி. சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, ஜீன் 9


**முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் 21,000 வரை மக்கள் தொகை குறைந்துள்ளது. உயிரிழப்புகள், மாவட்டத்தை விட்டு வெளியேறுதல் போன்றவற்றால் இந்தத்தொகை குறைந்துள்ளது என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார். முள்ளியவளை மாமூலைப் பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைச் குறிப்பிட்டார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் குறைந்த சனத்தொகை கொண்ட மாவட்டம் முல்லைத்தீவு. 2021 மற்றும் 2026ஆம் ஆண்டு புள்ளி விவரங்களை ஒப்பிடுகையில் 21,000 மக்கள் இங்கு இல்லை. கடல் மற்றும் காணிகள் அபகரிக்கப்படுவதால் வாழ்வாதாரத்தை இழந்து, அதிகளவானோர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

அத்துடன், தமிழ் மக்களின் பிறப்பு வீதமும் கணிசமாகக் குறைந்துள்ளது. இலங்கையிலேயே அதிக நிலப்பரப்பைக் கொண்ட முல்லைத்தீவு மாவட்டம் எதிர்காலத்தில் இல்லாமல் போகும் அபாயம் உள்ளது.

எனவே, புலம்பெயர் அமைப்புகளும் மக்களும் இம்மாவட்டத்தில் தமிழ்க் குடும்பங்களைக் குடியேற்றுவதற்கும், அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் அவசரமாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கு நாங்கள் முழுமையாக ஒத்துழைப்போம்-என்றார். (எ-இ)



## வடக்கில் காற்றின்வேகம் அதிகரிப்பு!

கொழும்பு, ஜூன் 9

காங்கேசன்துறை முதல் மன்னார் வழியாக கற்பிட்டி வரையிலான கடலோரப் பகுதிகளில் காற்றின் வேகம் அவ்வப்போது மணிக்கு 60 -70 கி.மீ. வரை அதிகரிக்கும் என்று எச்சரிக்கப் பட்டுள்ளது.

மறு அறிவிப்பு வரும்வரை அந்தப் பகுதிக்குச் செல்ல வேண்டாம் என மீனவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-இ)

## சுரேஷ் சாலேவைப் பாதுகாக்க கொழும்பில் போராட்டம்!

கொழும்பு, ஜூன் 9

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பான வழக்கில் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சுரேஷ் சாலேவை பாதுகாக்கவேண்டும் என வலியுறுத்தி நேற்றுக் காலை 10 மணிக்கு கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாக போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நாட்டுக்காகப் போராடிய சுரேஷ் சாலேவை சிறைப்படுத்தி ஜனாதிபதி உட்பட சானி அபேசேகர ஆகியோர் பயங்கரவாதியைப் போன்று செயற்படுகிறார்கள் எனப் போராட்டத்தில் கலந்துகொண்ட பெங்கமுவே நாலக தேரர் தெரிவித்தார்.

இந்தப் போராட்டத்தில் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில உட்பட அரசியல் தரப்பினர்கள் கலந்துகொண்டனர். (எ-இ)



## புலிகளின் நோக்கத்தை நிறைவேற்ற முயற்சியாம்

### விமல் தெரிவிப்பு!

கொழும்பு, ஜூன் 9



சுரேஸ் சாலேவைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைதுசெய்து, முள்ளிவாய்க்கால் பழிவாங்களை நிறைவேற்ற அரசாங்கம் முயற்சிக்கிறது. புலிகளின் நோக்கத்தை நிறைவேற்ற இடமளிக்கமாட்டோம் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள சுரேஷ் சாலேவைப் பாதுகாப்பதற்காக, கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாக நேற்று முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார். சுரேஸ் சாலேவுக்காக தொடர் சத்தியாகிரகப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)

## புலிகளைத் திருப்திப்படுத்த சாலேவை பலியிட முடியாதாம்!

### கம்மன்பில கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 9

புலிகள் அமைப்பைத் திருப்திப்படுத்த நாட்டுக்காக போராடிய சுரேஷ் சலேவைப் பலியிடப் போவதில்லை என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

பயங்கராவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள சுரேஷ் சலேவைப் பாதுகாப்பதற்காக நேற்றுக் காலை கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (எ-இ)




## அவையள் அப்பிடியா?

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' எண்டு வள்ளுவர் ரண்டாயிரம் வருசத்துக்கு முதலே சொல்லிப்போட்டார். ஆனால் இன்னமும் அந்தாள் சொன்னதை பெரிசா நாங்கள் பின்பற்றுறேலை. சாதி, மதம் , பதவி, பணம் எண்டு ஒவ்வொரு விசயங்களைச் சொல்லி ஏற்ற இறக் கங்களோடதான் வாழுறம். இப்பிடி 'நான் மேல நீ கீழ' எண்டு சொல்லுற அதிகாரம் ஆருக்குமில்லை. எல்லாருக்கும் பிறக்கேக்க ஒரேமாதிரித்தானே. பிறகுதானே உந்தப் பாகுபாடெண்ட முத்திரையைக் குத்தி, ஒதுக்கி வைக்கிறம். ஆனாலும் என்னதான் ஒதுக்கினாலும் நாங்கள் சரியா நடந்தால், மற்றவைக்கு முன்னால போட்டி போடுறமாதிரி எங்கட தகுதியை வளர்த்தால் உந்தப் பாகுபாடெல்லாம் பனிமாதிரி கரைஞ்சு போடும். ஆனால் கனபேர் அதைச் செய்யிறேலை. எதைச் சாட்டுச் சொல்லி எங்களை மற்றவை ஒதுக்கி வைச்சினமோ அதை இன்னும் உறுதிப்படுத் திறமாதிரி நடக்கினம். அதால இன்னும் அவையின்ர மரியாதை குறைஞ்சு இன்னும் ஒதுக்க வெளிக்கிட்டிடுவினம். ஏன் இப்பிடிச் சுத்திவளைச்சு இவ்வளவும் சொல்லுப்படுகுது எண்டால், இண்டைக்குப் பட்சி சொல்லப்போற விசயம் .கொஞ்சம் சிக்கலானது. அதாலதான் இவ்வளவு பீடிகை.

பிறப்பில ஆம்பிளையாவோ பொம்பிளையாவோ பிறந்தவை பிறகு அவையின்ர உடம்பிலையும், உணர்விலையும் ஏற்படுற மாற்றங்களால தங்களை எதிர்ப் பாலினமா உணரத்தொடங்குவினம். ஆம்பிளையா இருந்தவர் பொம்பிளை மாதிரி நடப்பார், பொம்பிளையள் மாதிரி உடுப்புப் போடுவார், கடைசியா அவர் பொம்பிளையாவே மாறிடுவர். இப்பிடி பொம்பிளையா இருந்து ஆம்பிளையா மாறினவையும் இருக்கினம். இதெல்லாம் இயற்கையான விசயங்கள். ஆனால் அப்பிடி ஒராள் 'திருநரா' மாறுறதை எங்கட சமூகம் ஏற்றுக்கொள்ளுறேலை. அவையை நக்கலடிச்சே மனசைக் காயப்படுத்தும். அதோட அவையள் அப்பிடி எதிர்ப்பாலினமா மாறாம இருக்கிறதுக்காக, அடிச்சு, உதைச்சு வீடுகளுக்க பூட்டி வைச்ச கதையளும் உண்டு. அப்பிடிப் பாதிக்கப்பட்ட சிலர் மனநிலை பாதிக்கப்பட்டும் இருக்கினம். இதையெல்லாம் மாத்தி 'நாங்களும் உங்களை மாதிரி மனுசர்தான், எங்களை எங்கட பாட்டில வாழவிடுங்கோ' எண்டு திருநர்கள் இப்ப துணிஞ்சு குரல் குடுக்க வெளிக்கிட்டிருக்கினம். சமூகமும் இப்ப கொஞ்சம் தன்ர பார்வையை மாத்தி அவைக்குரிய அங்கீகாரத்தை குடுக்கத் தொடங்கியிருக்கு.

ஆனால், இப்பிடி சமூகம் மெல்ல மெல்ல மாறத் தொடங்கேக்க, வெண்ணெய் திரண்டு வரேக்க தாழியை உடைச்ச மாதிரி தங்கட மரியாதையை தாங்களே கெடுக்கிறமாதிரி இந்தத் திருநர்கள் நடக்கக் கூடாதெல்லோ. 'சுயமரியாதை நடை' எண்டு கனடாக்காரர் குடுக்கிற காசில ஒவ்வொரு வருசமும் ஒரு ஊர்வலம் நடக்கிறது. இதில திருநர்கள், தன்பால் சேர்க்கையாளர்கள், இந்தச் சமூகத்தில அக்கறையுள்ளவை எண்டு கொஞ்சப்பேர் கலந்துகொண்டு ஊர்வலமாப் போவினம். அப்பிடி இந்த வருசமும் அந்த சுயமரியாதை ஊர்வலம் போன சனிக்கிழமை யாழ்ப்பாணம் லைப்ரரியில் தொடங்கி அப்பிடியே ரவுனுக்கால வந்து கோட்டையில போய் முடிஞ்சது. சுயமரியாதை ஊர்வலம் எண்டு பேரை வைச்சுப்போட்டு, அதில வந்த திருநர்கள் கனபேர் கொச்சையா, மற்றவை முகத்தைச் சுழிக்க வைக்கிற மாதிரி அங்க அசைவோட ஆடினதும், நடுறோட்டில படுத்துக் கிடந்து நெளிஞ்சு வளையிறதும், செத்தவீட்டுக்கு அடிக்கிற 'பாண்டை', சத்தமே போடக்கூடாத ஆஸ்பத்திரிக்கு முன்னுக்கு வைச்சு முழங்க வைச்சு குத்து டான்ஸ் போட்டதும், சின்னமேளம் மாதிரி அக்கடா துக்கடா உடுப்புகளோட வந்ததும் திருநர்களில இருந்த மதிப்பைக் கனபேருக்கு இல்லாமல் செய்து போட்டுது. அவையள் ஆடலாம், பாடலாம். ஆனால் அது மற்றவைக்கு இடைஞ்சல் இல்லாமல், முகத்தைச் சுழிக்க வைக்காமல் இருக்கோணும். அப்பதான் திருநர்களில ஒரு மதிப்பு வரும். இல்லாட்டி 'இதுகள் இப்பிடித்தான்' எண்டு திருநர்களைக் கேவலமாப் பாக்கிற மனோநிலை மாறாமலே போடும் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# ஆசிரியரை இடமாற்றக் கோரி கல்லூரி முன்பாகப் போராட்டம்

மன்னார், ஜூன் 9

நானாட்டான் டிலாசால் கல்லூரியில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரை இடமாற்றம் செய்யக் கோரி, கல்லூரி முன்பாக நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கல்லூரியின் அபிவிருத்திச் சங்கத்தினர், பெற்றோர் மற்றும் பழைய மாணவர்கள் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். குறிப்பிட்ட ஆசிரியர் கல்லூரிக்கு நியமிக்கப்பட்டதில் இருந்து ஊடகம் தொடர்பான கற்றல் பின்னோக்கியுள்ளது. இதனால் மாணவர்கள் ஊடகக் கற்றலுக்குச் செல்ல மறுக்கின்றனர். அத்துடன் பாடசாலை நிர்வாகத்துக்கும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கும் இவர் ஒத்துழைப்பு வழங்குவதில்லை என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றஞ்சாட்டினர். ஆசிரியர் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டபோதும், இதுவரை எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படாத நிலையில், அமைதி வழியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளோம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

போராட்ட இடத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஜெகதீஸ்வரன் வருகைதந்த நிலையில், அவரிடம் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் மனுக் கையளித்தனர். தொடர்ந்து வலயக்கல்வி அலுவலகம் சார்பாக வருகைதந்த அதிகாரிகளிடமும் மனுக் கையளிக்கப்பட்டது. (க-56)

# சொற்பொழிவு

நீர்வேலி, ஜூன் 9

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராணப் படனத்தொடரின் 56ஆவது சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. சிவநெறிப்பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள நிகழ்வில் கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையும், பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனின் தலைமையுரையும், சொற்பெரு வேந்தர், திருவாசகப்பிரியன் ச. நவநீதனின் 'மகா சாத்தாப் படலம்' எனும் விடயப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும்.

சொற்பொழிவிலிருந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

★★★★★

யாழ்ப்பாணம், ஜூன் 8

சைவ வாழ்வியலில் திருமந்திரம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும்முகமாக வாராந்தத் திருமந்திரச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர்-9 எதிர்வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு அராலி கிழக்கு மலையாளங்காடு ஐயனார் கோவிலில் நடைபெறவுள்ளது.

சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் நிகழ்வில் திருமூல நாயனார் குரு பூஜையை அடுத்து மாணவர்களின் கலைநிகழ்வும், பண்டிதர் திருவாசகப்பிரியன், த.மனோஜ்குமாரின் 'சிவனே முழுமுதல் தெய்வம்' எனும் பொருளில் சொற்பொழிவும் இடம்பெறும். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

# யாழ்.மாவட்டத்தில் இவ்வாரம் விசேட டெங்குக் கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ். மாவட்டத்தில் இன்று செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை, விசேட டெங்கு நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார். யாழ்.மாவட்டத்தில் அதிக ஆபத்துள்ள கரவெட்டி, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், கோப்பாய், சங்கானை, சாவகச்சேரி, நல்லூர், சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, உடுவில் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் விசேட டெங்குக் கட்டுப்பாட்டு வார நடவடிக்கைகள் செயற்படுத்தப்படவுள்ளன. இன்று செவ்வாய்க்கிழமை வீடுகள் மற்றும் சுற்றுச்சூழலிலும், நாளை புதன்கிழமை அரச மற்றும் தனியார் அலுவலகங்களிலும், நாளைமறுதினம் வியாழக்கிழமை பாடசாலை மற்றும் சகல கல்வி நிறுவனங்களிலும், எதிர்வரும் வெள்ளிக்கிழமை வர்த்தக நிலையங்கள், சந்தைகள், மத ஸ்தலங்கள் மற்றும் பொது அமைப்புகள் ஆகியவற்றிலும் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-66)

# பொலிஸ் தடுப்பிலிருந்த முதியவர் உயிர்மாய்ப்பு

அம்பாறை, ஜூன் 9

குடும்பத்தகராறு காரணமாகக் கைதுசெய்யப்பட்டு, பொலிஸ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த 65 வயதுடைய நபரொருவர் தன்னுயிரை மாய்த்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் அம்பாறை காரைதீவு பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

119 அவசர அழைப்புப் பிரிவுக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கமைய, குறித்த நபர், பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துவரப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்தார். குறித்த நபர் தான் அணிந்திருந்த சாரத்தின் ஒரு பகுதியைத் துண்டாகப் பயன்படுத்தி, உயிரை மாய்த்துள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், உயிரிழந்தவரின் உடம்பில் காயங்கள் இருப்பதாகக் கூறி, அவரது உறவினர்கள் பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் திரண்டிருந்தனர். குறித்த நபர் ஏற்கனவே பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். மீண்டும் இரண்டாவது தடவையாகக் கைதுசெய்யப்பட்டு, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தபோதே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (க-இ)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** காலையிலேயே உற்சாகத்துடனும் பரபரப்புடனும் காணப்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும். தாய்வழி உறவுகளால் ஆதாயம் ஏற்படும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணை வழியில் செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். கணவன் – மனைவிக்கிடையே சிறு பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மிதுனம்:** மனதில் தைரியம் அதிகரிக்கும். இன்று நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக முடியும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களுக்காக செலவு செய்யவேண்டிவரும். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும்.

**கடகம்:** தந்தைவழி உறவுகளால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். தந்தையின் தேவையை நிறைவேற்றும்வகையில் செலவுகள் அதிகரிக்கும். சகோதரர்களால் ஓரளவுக்கு நன்மை ஏற்படும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள்.

**கன்னி:** பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளால் கையிருப்புக் கரையும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**துலாம்:** மகிழ்ச்சி தரும் நாளாக அமையும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து தருவீர்கள்.

**தனுசு:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். அரசாங்கவகையில் எதிர்பார்க்கும் காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். தேவையற்ற செலவுகளால் மனச்சஞ்சலம் ஏற்படும்.

**மகரம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். கணவன் – மனைவிக்கிடையில் இருந்த கருத்துவேற்றுமை நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கும்பம்:** புஇன்று எந்த ஒரு விஷயத்திலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். புதிய முயற்சிகளைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். தாய்மாமன்வழியில் செலவுகள் ஏற்படக் கூடும்.

**மீனம்:** புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும். குடும்பம் தொடர்பாக எடுக்கும் முக்கியமான முடிவு சாதகமாகமுடியும். சகோதரர்கள் உங்களிடம் உதவி கேட்டுவருவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# குருதிக்கொடைக்கான தருணம் இதுவே!

'மண்ணுயிரைக் காப்பதே மனிதத்தின் ஆகச்சிறந்த அறம்' என்ற கோட்பாடு நிலவும் நம் சமூகத்தில், மற்றுமொரு உயிரைக் காப்பதற்கான உன்னதமான பணிதான் குருதிக்கொடை. தற்போது யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இரத்த வங்கிப் பிரிவில் அனைத்து வகைக் குருதிக்கும் மீண்டும் கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்ற செய்தி, ஒட்டுமொத்த குடா நாட்டு மக்களையும் அவசரமாகச் சிந்திக்கவும் செயற்படவும் தூண்டியுள்ளது. இந்த வாரம் திட்டமிடப்பட்டிருந்த நான்கு குருதிக்கொடை முகாம்கள் எதிர்பாராதவிதமாக ரத்தாகிய காரணத்தினால், அன்றாடக் குருதிச்சேகரிப்பு கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அவசர சத்திரசிகிச்சைகள், பிரசவ காலப் பேறுகள், விபத்துகள் மற்றும் புற்றுநோய் போன்ற தீவிர நோய்களினால் பாதிக்கப்பட்டு, ஒரு துளி குருதிக்காக மருத்துவமனைப் படுக்கைகளில் மரணத்துடன் போராடிக் கொண்டிருக்கும் எமது சக மனிதர்களின் உயிர் களைக் காக்கவேண்டிய தார்மீகப் பொறுப்பு இப் போது நம் ஒவ்வொருவர் தோள்களிலும் விழுந்துள்ளது.

உயிரைக் கொடுக்கும் ஆற்றல் இயற்கைக்கு மட்டுமே உண்டு; ஆனால், அந்த உயிரைத்தக்கவைக்கும் பேராற்றல் மனிதர்களாகிய நமக்கு மட்டுமே உண்டு. ஏனெனில், மனித உடலின் குருதிக்கு மாற்றீடாக உலகிலுள்ள எந்தவொரு அதிநவீனத் தொழிற்சாலையிலோ அல்லது ஆய்வகத்திலோ செயற்கையான குருதியைத் தயாரித்துவிட முடியாது. ஒரு மனிதனின் நரம்புகளில் ஓடும் இரத்தம், இன்னொரு மனிதனின் உடலுக்குள் பாயும்போது மட்டுமே அங்கு ஜீவன் நிலைபெறுகின்றது. நாம் செய்யும் ஒருமுறை குருதிக்கொடையானது, பிரித்தெடுக்கப்பட்டு மூன்று வெவ்வேறான உயிர்களைக் காக்கப் பயன்படுகிறது என்பது விஞ்ஞானபூர்வமான உண்மை. இத்தகையதொரு உன்னதப்பணியைச் செய்வதற்கு, நாம் எவ்வித விசேட தினங்களுக்காகவோ அல்லது முகாம்களுக்காகவோ காத்திருக்கவேண்டிய அவசியமில்லை; காலத்தின் தேவையறிந்து நாமே முன்வரவேண்டும்.

யாழ்ப்பாணம் போதனாமருத்துவமனை இரத்த வங்கிப் பிரிவினர் விடுத்துள்ள கோரிக்கைக்கு இணங்க, தகுதியுடைய அனைத்துக் குருதிக்கொடையாளர்களும் மருத்துவமனையின் 12ஆம் இலக்க நுழைவாயில் ஊடாகத் தினமும் காலை 8 மணியிலிருந்து மாலை 4 மணி வரை சென்று தாராளமாகக் குருதிக்கொடை வழங்கமுடியும். குருதிதானம் செய்வது கொடையாளரின் உடலுக்கும் புதிய இரத்த அணுக்களை உருவாக்கி ஆரோக்கியத்தை மேம்படுத்தும் ஒரு நற்செயலாகும். நம்மிடம் இருக்கும் செல்வங்களோ, சொத்துகளோ மரணத்தின் விளிம்பில் இருக்கும் ஒருவருக்கு வாழ்வைத் தந்துவிடாது; ஆனால், நமது உடலிலிருந்து தானமாகப் புறப்படும் சில மில்லிலீற்றர் குருதி, ஒரு குடும்பத்தின் ஒட்டுமொத்தக் கனவுகளையும், சிரிப்பையும் மீட்டுத் தரும் வல்லமை கொண்டது.

ஒரு சமூகத்தின் நாகரிகமும் முற்போக்குச் சிந்தனையும் அந்தச் சமயம் சார்ந்து எழும் நெருக்கடிகளை எப்படி எதிர்கொள்கிறது என்பதில்தான் தங்கியுள்ளது. முகாம்கள் ரத்தாகிவிட்டன என்பதற்காக நாம் முடங்கிவிடாமல், எமது கடமையை உணர்ந்து சுயமாக மருத்துவமனைக்குச் சென்று இரத்ததானம் செய்வதே தற்போதைய அவசரத் தேவையாகும். 'இன்று நான் தரும் குருதி, நாளை என் உறவையோ அல்லது ஒரு உயிரையோ காக்கப்போகிறது' என்ற உன்னத எண்ணத்தோடு இளைஞர்களும், பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும் யாழ். போதனா மருத்துவமனை நோக்கித் தங்களின் பாதைகளைத் திருப்ப வேண்டும். வாருங்கள், எமது குருதித் துளிகளால் மரணத்தின் வாசலில் நிற்கும் மனிதர்களை வாழ்வின் வசந்தத்திற்குள் அழைத்து வருவோம்!


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## பொய்யாமொழி

**ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி**

**பொருள்:** ஒழுக்கத்தால் எவரும் மேம்பாட்டை அடைவர்; ஒழுக்கத்திலிருந்து தவறுவதால் அடையத் தகாத பெரும் பழியை அடைவர்.



# 14 மாவட்டங்களுக்கு டெங்கு எச்சரிக்கை



**கொழும்பு,ஜூன் 9**

**நாட்டில் 14 மாவட்டங்களுக்கு டெங்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் கபில கன்னங்கார தெரிவித்துள்ளார்.**

இவற்றில் அதிக ஆபத்துள்ள 72 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் விசேட டெங்கு ஒழிப்புத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதேவேளை நாடு முழுவதும் கடந்த 5 ஆம் திகதி வரை 36 ஆயிரத்து 168 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த வருடத்தில் மாத்திரம், 3 சிறுவர்கள் உட்பட இதுவரை 20 பேர் டெங்கு நோயால் உயிரிழந்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)



## கொலைக்குப் பணம் வழங்கியவர் கைது

களுத்துறை, ஜூன் 9

களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துக்கு, பணம் வழங்கிய குற்றச்சாட்டில் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 28ஆம் திகதி காரில் வந்த இனந்தெரியாத நபர்களால், மோட்டார் சைக்கிளில் பயணித்த நபரொருவர் துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்யப்பட்டிருந்தார். இந்தச் சம்பவத்துக்கு பணம் வழங்கிய சந்தேகநபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் ஹம்பாந்தோட்டைப் பகுதியைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-இ)

## குறைகிறது தங்க விலை

கொழும்பு,ஜூன் 9

நாட்டில் கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில், தங்கத்தின் விலை குறைவடைந்து வருகிறது என்று அகில இலங்கை நகையக வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.


அதற்கமைவாக 24 கரட் தங்கம் ஒரு பவுண் 3 இலட்சத்து 83 ஆயிரம் ரூபாவுக்கும், 22 கரட் தங்கம் ஒரு பவுண் 3 இலட்சத்து 52 ஆயிரத்து 400 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகிறது என்றும் சங்கம் தெரிவித்துள்ளது. (க-இ)

## மாமன் தாக்கி மருமகன் சாவு!

கொழும்பு, ஜூன் 9

குடும்பத்தகராறில் மாமனாரின் கொடூரமான தாக்குதலில் காயமடைந்த மருமகன் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் அம்பலாந்தோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்பெத்தாவப் பகுதியில் நேற்று அதிகாலை நடந்துள்ளது.

சம்பவத்தில் மாமடலப் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார். கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய மாமனார் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (க-இ)



## களுத்துறை தெற்கில் 227 கிலோ கஞ்சா மீட்பு

களுத்துறை, ஜூன் 9

களுத்துறை தெற்கில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளின்போது, 102 பொதிகளில், சுமார் 227 கிலோக்கிராம் 620 கிராம் கேரள கஞ்சாப் பொதிகள் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

களுத்துறை தெற்குப் பகுதியில், ஒருதொகை கஞ்சாப்பொதிகள் வீதியோரத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலும், அளுத்கம கலப்புப் பகுதியில் புதைக்கப்பட்டிருந்த கஞ்சாப் பொதிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் மேலதிக விசாரணைகளுக்காக களுத்துறை தெற்குப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவை டுபாய் நிபுண என்றழைக்கப்படும் போதைப்பொருள் கடத்தல்காரருக்குச் சொந்தமானது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-இ)

நாளை
புதன்கிழமை- வைகாசி 27
10.06.2026
சுபநேரம் : 04.22 – 05.52
ராகுகாலம் : 11.52 – 01.22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media





மாகாணமட்ட கைப்பந்துப் போட்டி கிளி/பரந்தன் இந்துக் கல்லூரியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதில் யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் 17 வயது பிரிவுப் பெண்கள் அணி மாகாணமட்ட சம்பியனாகவும், 20வயது பெண்கள் அணியினர் மூன்றாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப்போட்டிக்கும் தெரிவாகியுள்ளனர். (எ-41-63)

# INVITATION FOR BID 2026/06
## VALIKAMAM EAST PRADESHIYA SABHA
## NORTHERN PROVINCE

1. The Chairman, Local Authority Procurement Committee, on behalf of the Valikamam East Pradeshiya Sabha,Puttur invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via Council
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of Building construction for grade mentioned in the table below..
4. Qualification' requirements are indicated in section 4 of the Procurement document. Additional details are provided in the Bidding Schedule (Section 5) for SBD 3 Documents
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from 2026-06- 09 To 2026-06-23 during 09:00 hrs and 15:00 hrs
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Valikamam East Pradeshiya Sabha, Puttur (T.P:021-205-8865, e.mail: pmdveps @ gmail.Com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below. The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Local Authority Procurement Committee, Valikamam East Pradeshiya Sabha, Puttur on or before as stated in table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Valikamam East Pradeshiya Sabha, Puttur as stated intable below.
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given inthe Tables.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | | | From 2026-06- 09 To 2026-06-23 | | | | |
| | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 2026-06-16 | | | | |
| | Closing and Opening of Bids | | | At 2.00 P.M on 2026-06-24 | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period (Days) |
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/14/41(13)/4/Council / Maintenance /03/2026/08 | * Package 01 Construction of Burning Shed, at Valalai Hindu Cemetery, * Repairs of Burning Shed in Theerthankulam Hindu Cemetery at Pathameny, * Repairs of Burning Shed at Mulangan Hindu Cemetery at Achchvely South, | 3.90 | 84 | C9 or above (Building) | 3,000.00 | 40,000.00 | 09.09.2026 | 49 |
| NP/14/41(13)/4/Council / Maintenance /03/2026/09 | Package 02 *Renovation of Sekkady Hindu Cemetery at Irupalai East *Repairs of Burning Shed Achchelu Hindu Cemetery at Achchelu North, * Repairs of Burning Shed in Kawduthu Hindu Cemetery at Avarankal East | 2.30 | 84 | C9 or above (Building) | 2,500.00 | 24,000.00 | 09.09.2026 | 49 |

Chairman
Local Authority Procurement Committee,
Valikamam East Pradeshiya Sabha, Puttur (cr 47660) N 09/06/2026



# சங்கிலியன் மன்னன் 407ஆவது நினைவு

யாழ்ப்பாணம், ஜூன் 9
யாழ்ப்பாண இராச்சியத்தின் இறுதிச் சைவத்தமிழ் மன்னன் 2ஆம் சங்கிலியனின் 407 ஆவது நினைவுநாள் விழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ். நல்லூர் முத்திரைச் சந்தியடியில் அமைந்துள்ள சங்கிலிய மன்னனின் சிலையடியில் சங்கிலிய மன்னனின் நினைவு தினக் குழுவின் ஏற்பாட்டில் சங்கிலிய மன்னனின் நினைவு தினக் குழுவின் செயலாளர் சைவப்புலவர் என்.பி. ஸ்ரீந்திரன் தலைமையில் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

நல்லூரில் அமைந்துள்ள 2ஆம் சங்கிலியனின் உருவச் சிலையடியில் திருமுறைப் பாராயணம், நந்திக் கொடியேற்றத்தைத் தொடர்ந்து அஞ்சலி நிகழ்வு ஆரம்பமாகி இடம்பெற்றது.


அதனைத் தொடர்ந்து 2 ஆம் சங்கிலிய மன்னனின் வரலாற்றை ஒளிப்படங்கள் ஊடாக வெளிப்படுத்தும் வகையிலான கண்காட்சிக் கூடம் திறந்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து இந்துசமயப் பேரவையின் தலைவர் ஈசான சிவசக்திகிரீவன், யாழ்ப்பாணம் பசுக்கள் இடபங்கள் பாதுகாப்புச் சபையின் செயலாளர் சிவஸ்ரீ.சிவலோகநாத தேசிகர், யாழ்.நாக விகாராதிபதி ஸ்ரீ விமலதேரர் ஆகியோர் கலந்து கொண்டு ஆசி உரைகள் ஆற்றினர். தொடர்ந்து நினைவுரைகளும் இடம்பெற்றன.

இதன்போது சைவப்புலவர்.ஸ்ரீந்திரன் தொகுத்த 2 ம் சங்கிலிய மன்னனின் வரலாற்றுக் குறிப்பு நூல் வெளியீடு செய்து வைக்கப்பட்டது. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# குருப்பெயர்ச்சி பலன்கள் 2026



ஆண்டுக்கு ஒருமுறை பெயர்ச்சி அடையக்கூடிய குரு பகவான் இந்தப் பராபவ வருடத்தில், வாக்கியப் பஞ்சாங்கத்தின்படி 26.05.2026 அன்று பகல் 11 மணிக்கு மிதுனம் ராசியில் இருந்து தனது உச்ச ராசியான கடகத்துக்குப் பெயர்ச்சியாகின்றார். திருக்கணித பஞ்சாங்கத்தின் படி ஜூன் 2 ஆம் திகதி பெயர்ச்சி நடக்கின்றது என்று ஜோதிடர்கள் தெரிவிக்கின்றனர். குருவின் இந்த நகர்வால் அதிர்ஷ்டமான மற்றும் கவனமுடன் இருக்கவேண்டிய ராசியினர் யார்?, அவர்களுக்கான ஒருவருட பலன்கள் என்ன என்பதை இங்கு பார்ப்போம்.




சிகரத்தை அடைய சிறகுகள் தேவையில்லை, சிதறாத கவனமே போதும் என்ற வரிகளுக்கு ஏற்ப எப்போதும் சிந்தித்து செயற்படும் விருச்சிக ராசிக்காரர்களே!

குருபகவான், ஜூன் 2 முதல் உங்கள் ராசிக்கு 9ஆம் இடத்தில் வந்து அமர்ந்து பலன் தரப்போகிறார். இதுவரை எந்த நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளாமல் ஒதுங்கியிருந்த நீங்கள், இனி வெளிச்சத்துக்கு வருவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு, மரியாதை கூடும். எதிர்பார்த்த வகையில் உதவி கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். பிரிந்த தம்பதி ஒன்றுசேர்வார்கள். பணப் புழக்கம் அதிகரிக்கும். இதனால் நெடுநாளாக வாங்க நினைத்த எலக்ட்ரானிக் பொருள்களை வாங்குவீர்கள். பழைய நண்பர்கள், உறவினர்கள் தேடி வருவார்கள். மகளின் திருமணத்தை ஊரே மெச்சும் படி நடத்தி முடிப்பீர்கள். மகனுக்கும் நல்ல நிறுவனத்தில் பணி கிடைக்கும்.

எதிர்பாராத பணவரவு உண்டு. சொந்த ஊர் நிகழ்ச்சிகளில் தலைமை தாங்குவீர்கள். அப்பாவின் உடல்நிலை சீராகும். அவரிடம் இருந்து வந்த கருத்துவேறுபாடுகள் ம்றையும். சிலர் வாடகை வீட்டில் இருந்து சொந்த வீட்டுக்கு மாறுவார்கள். அதற்கு கடன் உதவி கிடைக்கும். இழுபறியாக இருந்த வழக்குகளில் சாதகமான தீர்ப்பு கிடைக்கும்.

**குருபகவானின் பார்வைப் பலன்கள்:**
குருபகவான் உங்கள் ராசியைப் பார்ப்பதால், கையில் பணம் புரளும். எதிர்காலத்துக்காக சேமிக்கவும் செய்வீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். கணவன்- மனைவிக்குள் மனம் விட்டுப் பேசுவீர்கள். தன்னம்பிக் கையுடன் சில வேலைகளை முடிப்பீர்கள். ஆரோக்கியம் மிகச்சிறப்பாக அமையும்.

குரு பகவான் 3ஆம் இடத்தைப் பார்ப்பதால், புது எண்ணங்கள் மனதில் தோன்றும். பிரபலங்களின் அறிமுகம் கிடைக்கும். கைமாற்றாக கொடுத்த பணம் இப்போது வரும். தங்க ஆபரணங்கள் சேரும். புதிய சொத்து வாங்குவீர்கள். சொந்த பந்தங்களின் ஆதரவு பெருகும்.

குருபகவான் 5ஆம் இடத்தைப் பார்வையிடுவதால், குழந்தைப் பாக்கியம் கிடைக் கும். பிள்ளைகளால்

> ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும், தடைபட்ட காரியங்கள் நிறைவேறும் மற்றும் புதிய சொத்து சேர்க்கை உண்டாகும்.

சொந்த பந்தங்கள் மத்தியில் பெருமையடைவீர்கள். வட்டிக்கு வாங்கிய கடனை கொஞ்சம் கொஞ்சமாக செலுத்தி முடிப்பீர்கள். எடுத்த காரியங்களில் முதல் முயற்சியிலேயே வெற்றி கிட்டும். வாகன வசதி பெருகும். குல தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

**குருபகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**
உங்களின் தன பூர்வ புண்யாதி பதியுமான குருபகவான் தனது நட்சத்திரத்தில் 02.06.26 முதல் 18.06.26 வரை பயணம் செய்வதால் குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். அரசாங்க வேலைகள் முடிவுக்கு வரும்.

சுகாதிபதியான சனிபகவானின் நட்சத்திரத்தில் 18.06.26 முதல் 19.08.26 வரை குருபகவான் பயணம் செய்வதால் மனக்குழப்பங்கள் நீங்கும். குடும்ப வருமானம் உயரும். வருங்காலத்துக்கான முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள். சிலர் இடவசதியுள்ள வீட்டுக்கு மாறுவீர்கள். இளைய சகோதரிக்கு திருமணம் கூடிவரும். புது வாகனத்தில் வலம் வருவீர்கள்.


**வியாபாரம், உத்தியோகம்:** வியாபாரத்தில் பெரிய முதலீடுகளைப் போட்டு இலாபம் ஈட்டுவீர்கள். உங்களின் வியாபார யுக்திக்கு ஈடு கொடுக்க முடியாமல் போட்டியாளர்கள் திணறுவார்கள். வேலையாட்களின் தொந்தரவு குறையும். ரியல் எஸ்டேட், ஹோட்டல், கட்டட உதிரிபாகங்கள், இரும்பு வகைகளால் ஆதாயம் அடைவீர்கள். அயல்நாட்டுத் தொடர்புடைய நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்வீர்கள்.

உத்தியோகத்தில் மேலதிகாரி உங்களைப் பெருமையாகப் பேசும் அளவுக்கு நடந்து கொள்வீர்கள். வேலைச்சுமை கொஞ்சம் அதிகமாகத்தான் இருக்கும். அடுத்தவர் பிரச்சினையில் தலையிடாமல் இருப்பது நல்லது. யாரைப் பற்றியும் தலைமையிடத்தில் புகார் கூற வேண்டாம். கணினித் துறையினருக்கு வெளிநாட்டு நிர்வாகத்தில் இருந்து வாய்ப்புகள் வரும். கலைஞர்கள் விமர்சனங்களைக் கடந்து சென்று முன்னேறுவார்கள். மூத்த கலைஞர்களிடம் மனஸ்தாபங்கள் வரக்கூடும். முடிந்த அளவு விட்டுக்கொடுத்துப்போகவும். புது வாய்ப்புகள் தேடி வரும். இந்த குருப்பெயர்ச்சி புது அணுகு முறையால் புதுமை படைக்கும் காலமாக அமையும்.

# உயர்கல்விக் கொள்கை தயாரிப்பு மக்களிடம் கருத்துகள் கோரல்!

கொழும்பு, ஜூன் 9
முன்மொழியப்பட்ட உயர் கல்விக்கான தேசிய கொள்கைக் கட்டமைப்பைத் தயாரிப்பதற்காகப் பொதுமக்களிடம் கருத்துகளைப் பெற்றுக்கொள்ளும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.
விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரும், பிரதமருமான கலாநிதி ஹரிணி அமரசூரியவின் வழிகாட்டலின்கீழ், உயர் கல்விக்கான தேசிய கொள்கைக் கட்டமைப்பைத் தயாரிக்கும் பணிகள் தற்போது நிபுணர் குழுவொன்றினால் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.
இதற்காக கல்வி மற்றும் உயர் கல்வித் துறைகளை உள்ளடக்கி, பல்வேறு தரப்பினரிடமிருந்து கருத்துகளையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்வதற்கான பல சுற்று விவாதங்கள் கடந்த சில நாள்களாக நடத்தப்பட்டுள்ளன.
இதற்கு இணையாக, இது குறித்து பொது மக்களின் கருத்துகளைக் கோருவதற்கும் தீர்மானிக்கப்பட்டதாக கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. அதன்படி, உயர்கல்விக்கான முன்மொழியப்பட்ட தேசிய கொள்கைக் கட்டமைப்பைத் தயாரிப்பது தொடர்பான ஒரு கேள்வித்தாள் அமைச்சகத்தின் இணையத்தளத்தில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில், பொதுமக்கள் அதனை அணுகி தங்கள் கருத்துகளைச் சமர்ப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# நாட்டில் பதிவின்றி இயங்கும் 300 முதியோர் இல்லங்கள்



கொழும்பு, ஜூன் 9
நாட்டில் பதிவு செய்யப்படாத 300க்கும் அதிகமான முதியோர் இல்லங்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளர் சதுர மிகிதுன் தெரிவித்துள்ளார்.
தற்போது 456 முதியோர் இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.
அவற்றில் முறையாகப் பதிவு செய்யப்பட்டு வழிகாட்டுதல்களைப் பின்பற்றி நடத்தப்படும் முதியோர் இல்லங்களின் எண்ணிக்கை 148 ஆகும்.
இதுவரை பதிவு செய்யப்படாத முதியோர் இல்லங்களைப் பதிவு செய்து உரிய வழிகாட்டுதல்களின்படி நடத்துமாறு அவற்றின் உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும் அதுதொடர்பாக முறையான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை.
இதன் காரணமாக குறித்த முதியோர் இல்லங்களைப் பதிவுசெய்வதற்காக ஒரு குறிப்பிட்ட கால அவகாசத்தை வழங்குவதற்கும் அந்தக் காலப்பகுதிக்குள் பதிவுசெய்யப்படாத இல்லங்கள் தொடர்பாக சட்டபூர்வ நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விருதுகளுக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவையினால் கலைத்துறைக்கு பங்காற்றிய கலைஞர்களுக்கு யாழ்.ரத்னா மற்றும் இளங்கலைஞர் விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இதற்காக கவிதை, சிறுகதை, நாவல், நடனம், இசை, ஓவியம், சிற்பம், நாடகம், நாடக எழுத்துருவாக்கம், குறும்படம், இசைநாடகம், நாட்டுக்கூத்து, வாத்தியக்கருவிகள், வாத்தியக்கருவிகள் உருவாக்கம், கிராமியக்கலைகள், ஒப்பனைக்கலை ஆகிய துறை களுக்காக யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பணியாற்றிய கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. யாழ். ரத்னா விருக்கு 60 வயதைப் பூர்த்தி செய்த இதுவரை யாழ்ரத்னா விருதினைப் பெற்றுக்கொள்ளாத யாழ்ப்பாணப் பிரதேச பிரிவினை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட மூத்த கலைஞர்கள் விண்ணப்பிக்க முடியும். இளங்கலைஞர் விருதுக்கு 40வயதுக் குட்பட்ட இதுவரை யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவையில் இளங்கலைஞர் விருது மற்றும் இளங்கலைஞர் சான்றிதழினைப் பெற்றுக் கொள்ளாத யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவினை நிரந்தர வதிவிடமாகவும் தற்பொழுதும் இயங்கிக்கொண்டிருக்கும் இளங்கலைஞர்கள் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப்படிவங்களை யாழ்ப்பாண பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பத்துடன் உரிய கலைத்துறையின் வளர்ச்சிக்காக பங்களிப்பு செய்தமையை சான்றுப்படுத்தும் ஆவணங்களுடன் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-41)

# சமூக சேவை மனப்பாங்குள்ள தலைமுறையை உருவாக்குக!

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

**முல்லைத்தீவு, ஜூன் 9**

**பல்கலைக்கழகத்துக்கு அதிக எண்ணிக்கையான மாணவர்களை அனுப்புவதில் ஒரு பாடசாலைக்குப் பெருமை கிடையாது. எத்தனை மாணவர்களைத் தமது சமூகத்துக்குச் சேவை மனப்பாங்குடன் பணியாற்றுவதற்கு வழங்கியுள்ளோம் என்பதில்தான் ஒரு பாடசாலைக்கு உண்மையான பெருமை கிடைக்கும் என வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.**

முல்லைத்தீவு, முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியின் 75ஆவது ஆண்டு 'பவளவிழா' நிகழ்வின் இரண்டாம் நாள் விசேட அமர்வில் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எந்தவொரு பாடசாலையினதும் எழுச்சியும் வீழ்ச்சியும் அதன் அதிபரில்தான் தங்கியிருக்கின்றது. சிறப்பான தலைமைத்துவம் அமைந்தால் அந்த நிறுவனம் எழுச்சியடையும்; தவறான தலைமைத்துவம் கிடைத்துவிட்டால் அது வீழ்ச்சியடையும்.

இன்று தலைமைத்துவப் பண்பு, சமூகப் பொறுப்பு மற்றும் மனிதநேயம் இல்லாதவர்கள் உயர்பதவிகளில் இருப்பதால் நாம் தினமும் பல சிக்கல்களை எதிர்கொள்கின்றோம், இதனால் பாதிக்கப்படுவது எமது மக்கள்தான். இன்றைய கல்விமுறைமை பணத்தை நோக்கியதாக மட்டுமே மாறிவருகின்றது. படித்து உயர்நிலைக்கு வந்து பணத்தைச் சம்பாதித்தால் சரி என்றே பலர் நினைக்கின்ற னர்.

புதிய தலைமுறைக்குச் சேவை மனப்பாங்கு என்றால் என்னவென்றே தெரியாத காலமாக மாறி வருகின்றது. பணத்தை உழைப்பதால் மதிப்புவராது, சேவையைச் செய்தால்தான் மதிப்பு வரும் எனவே, பாடசாலைகள் இளவயதிலேயே பிள்ளைகளுக்குப் ப்ணத்துக்கு முக்கி யத்துவம் கொடுக்காமல் சேவைக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பழக்க வேண்டும். இதைச் செய்யத் தவறினால் சமூகத்தின் பால் சிந்திக்கும் ஒரு தலைமுறை எதிர்காலத்தில் இல்லாமல் போகும் - என்றார். (ச-19,113)

நாஹா மருத்துவ நிலையம்
ஹோமோன் பற்றாக்குறையும் -
ஒழுங்கீனமான மாதவிடாய் இதனால் ஏற்படும்
குழந்தையின்மை. ஹார்மோன் ஏற்படுத்தும்
நீரிழிவின் ப்ெரிய பாதிப்பு அதனால் இதயம்
அச்சுறுத்தப்படல். வெற்றிதரும் சிறப்புசிகிச்சை.
T.P.: 077 321 2740
வங்கி முன்லேன் சாத்தாவத்தை வயிரவர்
கோயிலடி (ஜெகபதிவீடு) மானிப்பாய்.

BCAS INTERNATIONAL
UNIVERSITY PLACEMENTS
UniWorld
YOUR GLOBAL EDUCATION
JOURNEY STARTS HERE
Explore. Learn. Grow. Succeed.
UK
CANADA
AUSTRALIA
FRANCE
GERMANY
- Meet university representatives
- Exclusive scholarships
- FREE visa guidance
- Pathway programs
- Student loans and easy payment plans
- IELTS guidance
CALL TO REGISTER 077 769 8062
MEET UNIVERSITIES | EXPLORE PROGRAMS | APPLY ON THE SPOT
13 JUNE 2026
09 AM - 4 PM
JETWING JAFFNA
37, Mahatma Gandhi Road, Jaffna
FREE ENTRY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# பௌத்த ஒழுக்காற்று நீதிமன்றம் புத்த தர்மத்துக்கான இழுக்கு!

## கொதிக்கிறார் ரணில்

**கொழும்பு, ஜூன் 9**

**தர்மத்தின் மீது எவ்விதப் பிரச்சினையும் இல்லாத ஒரு சூழலில், பௌத்த ஒழுக்காற்று நீதிமன்றத்தை எவ்வாறு உருவாக்கமுடியும்? இந்த விவகாரம் உச்ச நீதிமன்றத்துக்குச் சென்றால், அது நாட்டின் அரசியலமைப்புக்கு முரணானது எனத் தீர்ப்பளிக்கப்படுவது நிச்சயம் என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசாங்கத்தின் தன்னிச்சையான அரசியல், ஆன்மிகம் மற்றும் நிர்வாக நகர்வுகள் நாட்டைப் பாரிய வீழ்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்கின்றன. கடந்த காலங்களில் கொழும்பு வீதிகளில் காணப்பட்ட பாரம்பரிய மதப்பொலிவு தற்போது தற்போதைய ஆட்சியில் முற்றாக மங்கிப் போயுள்ளது. இம்முறை சிங்களப் புத்தாண்டு மற்றும் வெசாக் பண்டிகைகள் எவ்விதத் துடிப்பான தன்மையுமின்றி, கொண்டாட்டங்களின்றி வெறிச்சோடிப் போயிருந்தன. அரசாங்கத்தினால் புதிதாகக் கொண்டுவரப்படவுள்ளதாகக்கூறப்படும்பௌத்த ஒழுக்காற்று நீதிமன்றம் பௌத்த விழுமியங்களைப் பற்றிய அடிப்படை அறிவேதுமின்றிய சட்ட நகர்வுகளில் தன்னிச்சையான செயற்பாடாகும். ஆன்மிக மற்றும் மத நடவடிக்கைகளைத் தங்களது முழுமையான நிர்வாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதே அரசாங்கத்தின் மறைமுக நோக்கம் ஆகும். தர்மத்தை அதிகார வர்க்கத்தால் ஒருபோதும் கட்டுப்படுத்தமுடியாது- என்றார். (ச-இ)

### பாலியல் சித்திரவதை

# சிறையில் சுரேஷ் சாலே சாகும்வரை உண்ணாவிரதம்

கொழும்பு, ஜூன் 9

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அரச புலனாய்வுத் துறைத் தலைவர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே, தமக்கு இழைக்கப்படும் மிக மோசமான உடல், மன மற்றும் பாலியல் ரீதியான சித்திரவதைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார் எனப் பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் சட்டத்தரணி உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில்,

மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே நீதிமன்ற உத்தரவு எதுவுமின்றி, ஜனாதிபதியின் தனிப்பட்ட நேரடி உத்தரவின் பேரில், பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்திப் பழிவாங்கும் நோக்குடன் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தக் கைது நடவடிக்கைக்கு எதிரான அடிப்படை உரிமை வழக்கு தற்போது நீதிமன்றில் நிலுவையில் உள்ளது.

காவலில் தமக்கு இழைக்கப்படும் அநாகரிகமான சித்திரவதைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கடந்த வெள்ளிக்கிழமை இரவு முதல் சுரேஷ் சலே உணவு, நீர் மற்றும் மருந்துகளை முற்றாக மறுத்து இந்தச் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

அவருக்கு ஒரு கரண்டி சோறும் முள்ளங்கிச் சொதியும் மாத்திரமே உணவாக வழங்கப்பட்டுள்ளது. அதுவும் ஒரு பழைய பத்திரிகைத் தாளில் வைத்து வழங்கப்பட்டதால், உணவு நிலத்தில் கொட்டிப் போயுள்ளது. இதனால் மனதளவில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள அவர், 'தன்னை ஒரு நாயை விட மோசமாக நடத்துகிறார்கள்' என நேற்றுக் காலை சிறைக்குத் தன்னைத் தேடிவந்த தனது மகனிடம் அழுது புலம்பியுள்ளார்.

அத்துடன் அவர் பாலியல் மற்றும் உடல் ரீதியான கடுமையான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார் - என்றார். (ச-இ)

# என் கணவர் அப்பாவி மீட்க குரலெழுப்புவோம்

## சுரேஷ் சாலேவின் மனைவி தெரிவிப்பு!

கொழும்பு, ஜூன் 9

எனது கணவர் அப்பாவி, இந்த நாட்டுக்காக 38 வருடங்கள் சேவையாற்றியவர். எனவே, அவருக்காக நாட்டு மக்கள் குரல் கொடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் சுரேஷ் சலேவின் மனைவியான மனோரி சலே தெரிவித்துள்ளார். சிறைக்குள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தனது கணவரைப் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில், சுரேஷ் சலே சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார். அதனை நிறுத்துவதற்கு நாம் முற்பட்டோம். ஆனால் தனது நிலைப்பாட்டில் அவர் உறுதியாகவுள்ளார். பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிராகப் போராடுகின்றார். அவரிடம் விசாரணை நடத்தப்படலாம். ஆனால் மனிதாபிமானமற்ற முறையில் நடந்துகொள்ளக்கூடாது. அவர் நடத்தப்படும் விதம் பெரும் அநீதியாகும்.

நாட்டுக்காக சேவையாற்றிய அவருக்காக அனைவரும்குரல் எழுப்பவேண்டிய நேரம் வந்துவிட்டது - என்றார். (ச-44)

# ஆய்வுக்கப்பல்கள் நுழைய புதிய கட்டுப்பாடுகள் விதிப்பு

கொழும்பு, ஜூன் 9

சீனா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் ஆய்வுக் கப்பல்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைவதை அனுமதிப்பது தொடர்பில் எழுந்துள்ள இராஜதந்திர சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கில், புதிய நிலையான மூலோபாய விதிமுறை வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்விதிமுறை வரைபு தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்தின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. வல்லரசு நாடுகளின் ஆய்வுக் கப்பல்களின் வருகையால் இலங்கைக்கு ஏற்படும் பிராந்திய மற்றும் சர்வதேச இராஜதந்திர நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்காக, அனைத்து நாடுகளுக்கும் பொதுவானதொரு மூலோபாய ஒத்துழைப்பு விதிமுறையை உருவாக்குமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உத்தரவிட்டிருந்தார். இதற்கமைய, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையில் நியமிக்கப்பட்ட விசேட குழுவினர், இந்தப் புதிய நிலையான செயற்பாட்டுச் செயல்முறை விதிமுறைகளைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அனைத்து நாடுகளுக்கும் பாரபட்சமற்ற வகையில், இலங்கையின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் இந்த வரைபு உருவாக்கப்பட்டுள்ளது என்றும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

# மக்கள் ஆணைக்கு கட்டுப்படவேண்டும்

## ஐ.ம.சக்தி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 9

மாகாணசபைத் தேர்தல் விரைவில் நடத்தப்படும் என்பது தேசிய மக்கள் சக்தி வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றாகும். எனவே மாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் விரைவில் நடத்தவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதம நிறைவேற்று அதிகாரியும், நாடாளுமன்ற உறுப்பினருமான அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாணசபைத் தேர்தல் விரைவில் நடத்தப்படும் என்பது தேசிய மக்கள் சக்தி வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றாகும். அதனை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தேர்தலை எதிர்கொள்ள முழு நாடும் தயார். ஆனால் தெரிவுக் குழு அமைத்து, திட்டமிட்ட அடிப்படையில் தேர்தல் இழுத்தடிக்கப்படுகின்றது. தமக்கு மக்கள் ஆணை உள்ளது, பல வருடங்களுக்கு இந்த அரசை அசைக்கமுடியாது என நம்பும் அரசு முடிந்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்தட்டும். எமது சவாலை அரசாங்கம் ஏற்கவேண்டும்- என்றார். (ச-44)



# தேர்தலில் போட்டியிடும் எண்ணம்எனக்கில்லை

## மைத்திரி சகோதரர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 8

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எண்ணம் இல்லை. இந்த அரசாங்கம் மீது மக்கள் அதிருப்தி நிலையிலும் இல்லை என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சகோதரரும், பிரபல வர்த்தகருமான டட்லி சிறிசேன தெரிவித்துள்ளார். சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் அவர் கருத்து வெளியிடுகையில், ஜனாதிபதித் தேர்தல் உடனே நடக்காது. பலர் தற்போதே வேட்பாளர்களாவதற்கு குவிந்துள்ளனர். எனக்குஅவ்வாறான திட்டம் இல்லை. யார் வேண்டுமானாலும் அரசாங்கத்தை வீழ்த்தலாம். எனவே, பொறுப்பேற்பதற்குத் தகுதியானவர்கள் இருக்கவேண்டும். நடக்கக்கூடமுடியாத நிலையில் உள்ளவர்கள் அரசியல் செய்ய முற்படுகின்றனர். ஜி.எல்.பீரிஸ் போன்றவர்கள் அரசியலில் இருந்து ஒதுங்கவேண்டும் - என்றார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கண்ணீர் அஞ்சலி



அன்னை மடியில் 06.09.1964


ஆண்டவன் அடியில் 07.06.2026

## யேசுதாஸ் யூலியஸ்சேவியர்

அகிலம் ஒருநொடி நின்றுவிட்டதே
உங்கள் மரணச் செய்தியைக் கேட்டு
எமக்கெல்லாம் நிழல்தந்த ஆலமரம் இன்று
வேரோடு சாய்ந்து விட்டதே
அரிய சரித்திரம் முடிந்து விட்டதே
விடிவெள்ளியாய் எமக்கிருந்தீர் - இன்று
அந்த விடிவெள்ளியை காணாது தவிக்கின்றோம்.
இனி எம் விடிவெள்ளியை எப்போது காண்போம்!


பிரிவால் துயர்கொள்ளும்
குடும்பத்தினர்.

# அன்னாசி அறுவடை



கிளிநொச்சி திருவையாறு விவசாய போதனாசிரியர் பிரிவுக்குட் பட்ட திருவையாறு பகுதியில் அன்னாசி அறுவடை நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில், அந்தப் பகுதி விவசாயி ஒருவரின் விவசாய நிலத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் வி. சோதிலட்சுமி தலைமை தாங்கினார். நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெ. ரஜீவன், கிளிநொச்சி மாவட்டச் செயலர்சுப்பிரமணியம் முரளிதரன், வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் எஸ். சிவசிறீ உள்ளிட்டோர்கலந்துகொண்டனர். (ச)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



சந்தியாப்பிள்ளை ஸ்ரனிஸ்லாஸ்
ஜோசப் மனோகரன்

மண்ணில் 20.04.1962

விண்ணில் 09.06.2023

அப்பா என்பது ஒரு அதிசயமான புத்தகம்
அது கிடைக்கும் வயதில்
நம்மால் அதை புரிந்து கொள்ள
முடியவில்லை. புரிந்து கொள்ள
நினைக்கும் போது அது,
கிடைப்பது இல்லை.

குடும்பத்தினர்

(CS/31959) J-1

# மரண அறிவித்தல்



மலர்வு 25 01 1955

உதிர்வு 06 06 2026

## வைத்தியர் கனகரத்தினம் இளங்கோ

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கொக்குவில், வவுனியா மற்றும் தற்போது கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த இளைப்பாறிய வைத்தியரும் (களுபோவில வைத்தியசாலை), முன்னாள் வடமாகாண பிரதி சுகாதார சேவை பணிப்பாளரும், வவுனியா செஞ்சிலுவை சங்க ஸ்தாபகருமான வைத்தியர் கனகரத்தினம் இளங்கோ அவர்கள் 06.06.2026 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - விமலாம்பிகை தம்பதிகளின் அன்பு மூத்தமகனும் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை-ராஜமலர் தம்பதிகளின் அன்பு மருமகனும் மஞ்சுளா அவர்களின் பாசமிகு கணவரும் Dr.அர்ஜுனர் (Aus), புருஷோத்மன் (UK), Dr.பிரகலாதன் (SL), கௌத்தமன் (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும் ராஜேஸ்வரி (Canada), நளினேஸ்வரி (Canada), இளவழகனார் (Canada), ஞானேஸ்வரி (நெடுங்கேணி), சிலோன்மணி (Canada), அன்பழகன் (USA), குமாரஸ்ரீ (USA), யாழினி (Germany) ஆகியோரின் அன்பு நிறைந்த சகோதரரும் Dr.மாதுரி (Aus), கஜனி (விரிவுரையாளர்), Dr.அகல்யா (SL) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் Dr.கண்ணன் (UK) அவர்களின் மைத்துனரும் அகரன் அவர்களின் அன்பு நிறைந்த பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக (இல.06, பெர்னாண்டோ வீதி, கல்கிசை) அன்னாரின் இல்லத்தில் 09.06.2026 இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியிலிருந்து இரவு 8.00 மணிவரை வைக்கப்பட்டு, நாளை 10.06.2026 புதன்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் முற்பகல் 10.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று மதியம் 1.00 மணியளவில் பூதவுடல் கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல் - குடும்பத்தினர்
தொடர்பு : +94774322265 / +94772882490

# மரண அறிவித்தல்



## அமரர் திருமதி சுந்தரமூர்த்தி நிர்மலாதேவி

ஏழாலை மேற்கு, கஜட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் திருமதி. சுந்தரமூர்த்தி நிர்மலாதேவி அவர்கள் நேற்று (08.06.2026) திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சச்சிதானந்தசிவம் - பராசக்தி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், விசுவலிங்கம் சுந்தரமூர்த்தி அவர்களின் பாசமிகு மனைவியும், கபிலன் (முன்னாள் யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட சிரேஷ்ட விரிவுரையாளரும், யாழ்மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைப்பாளர்), தாசங்கன் ஆகியோரின் அன்புத் தாயாரும், தர்ஷிகா, நிசாந்தினி ஆகியோரின் அன்பு மாமியும், பிரமாத்மிகா, விஸ்வாத்மிகா, அதிதீரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சத்தியபாமா, சிறிதரன், சுலோசனாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலகுமார், புவனேஸ்வரி, சசீதரன் ஆகியோரின் மைத்துனியும், பவரூபா, ஜெயரூபா, சிவரூபா ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.06.2026) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் ஏழாலை மத்தி உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
ஏழாலை மேற்கு, கஜட்டை

(CS/31953) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 18 வயதுப்...

தேவ பெண்கள் மகளிர் கல்லூரியை எதிர்த்து மகாஜனக் கல்லூரி அணி மோதியது. இதன்போது 2:0 என்ற கோல் கணக்கில் மகாஜனக் கல்லூரி அணி வெற்றிபெற்றது.
தொடரின் சிறந்த வீராங்கனையாக மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த ஆன் திவிசனாவும், சிறந்த கோல் காப்பாளராக மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த வ.சாளினியும் தெரிவு செய்யப்பட்டனர். (அ-ம-66)

## சாவகச்சேரியில்...

சருகுப்புலி பத்திரமாக மீட்கப்பட்டது. இலங்கையில் அழிந்துவரும் உயிரினமாகவும் பாதுகாக்கப்பட வேண்டிய இனமாகவும் காணப்படுகின்ற சருகுப்புலி அண்மைக்காலமாக குடியிருப்புப் பகுதிகளுக்குள் புகுந்து கால்நடைகளையும், செல்லப்பிராணிகளையும் வேட்டையாடி வந்தது. இவ்வாறான நிலையிலேயே நுணாவில் மேற்குப் பகுதியில் வைத்து நேற்று அந்தப் புலி பிடிக்கப்பட்டுள்ளது. (அ-ம-23)

## குடும்பத்தலைவர்...

படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடந்த சில நாள்களாக உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-27)

## செம்மணியில்...

பட்ட சம்பவமாக இது பதிவாகியுள்ளது. செம்மணிப் புதைகுழி மீதான மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளின் 19ஆம் நாள் நடவடிக்கைகள் நேற்று இடம்பெற்றன. இதன்போதே, புதைகுழிக்குள் இருந்து 16 என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்துடன், 4 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன.
இதன்படி செம்மணிப் புதைகுழிக்குள் இருந்து இதுவரை 318 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்ட நிலையில், 302 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன.
யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்ற நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் அகழ்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தொல்லியல் பேராசிரியர் ராஜ்சோமதேவா தலைமையிலான குழுவினர், சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன், குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், சட்டத்தரணிகள், துறைசார் நிபுணர்கள், ருகுணு பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோர் அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பில் சட்டத்தரணி நிறஞ்சன் அகழ்வுப் பணிகளில் முன்னிலையாகி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## மடிந்திருக்கும்...

செம்மணிப் புதைகுழிக்குள் இருந்து அண்மைய நாள்களாக ஏராளமான என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டு வரும் நிலையிலேயே இந்த என்புத் தொகுதியும் அடையாளம் காணப்பட்டுள்ளது. அதை அடையாளப்படுத்தி மீட்கும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. (அ-ம-26)

## சாலேயின்...

கோரி வழக்குத் தொடுத்திருந்தார். இது தொடர்பான வழக்கு விசாரணைக்குச் சென்றிருந்த வேளையில், அவர் என்னைச் சந்தித்தார். 'பாதர், உங்களை கஷ்டத்துக்குள் தள்ளுவதற்காக நான் இந்த வழக்கை தொடுக்கவில்லை. எனது பெயரைக் காக்கவே வழக்குத் தொடுத்துள்ளேன். எம்மால் சமரசத்துக்கு வரமுடியும்' எனக் கூறினார்.
'சமரசத்துக்கு வருவதற்கு உங்கள் நிபந்தனை என்ன?' என்று நான் சுரேஷ் சாலேவிடம் வினவினேன். 'பாதர் நீங்கள் விடுத்த அந்த அறிவிப்பில் இருந்து எனது பெயரை விலக்கிக் கொள்ளுங்கள்' எனக் குறிப்பிட்டார். அவ்வாறு செய்ய முடியாது என நான் திட்டவட்டமாகக் கூறினேன். எனது அறிவிப்பு சரியானது என்பதில் நான் உறுதியாக நின்றேன். சமரசம் தேவை இல்லை, வழக்கை தொடர்ந்து முன்னெடுப்போம் எனக் கூறினேன். எனவே, இழப்பீட்டு வழக்கில் இருந்து என்னை பாதுகாப்பதற்காகவே சுரேஷ் சாலே கைது செய்யப்பட்டுள்ளார் எனக் கூறுவது அப்பட்டமான பொய்யாகும். சாட்சியங்களின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டிருக்கக்கூடும்.
போரை முடிவுக்குக் கொண்டுவந்தனர் என்பதற்காக குற்றங்களை மூடி மறைக்க முடியாது. படுகொலை செய்வதற்கு எந்தவொரு படையினருக்கும் உரிமை கிடையாது. குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் படையினர்களில் ஈடுபட்ட படையினருக்கு அனுமதியில்லை. எனவே, நாட்டுக்கான சேவை என்பது வேறு, குற்றச்செயல் என்பது வேறு. இவை இரண்டையும் நாம் பிரித்துப் பார்க்க வேண்டும். பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் தடுத்துவைப்பு என்பது புதிய விடயம் அல்ல. இதற்கு முன்னரும் பலர் தடுத்துவைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டுள்ளது. எனவே, தனி நபருக்காக சட்டத்தை மாற்றும் அணுகுமுறை பின்பற்றப்படக்கூடாது. விசாரணை தொடர்ந்து இடம்பெறவேண்டும்.
உங்கள் தாய் அல்லது தந்தையை இராணுவச் சிப்பாய் ஒருவர் கொன்றுவிட்டார். அவர் போரில் ஈடுபட்டவர், போரை முடிக்க பங்களிப்பு செய்தவர் என்ற அடிப்படையில் விசாரணை தேவையில்லை, தண்டனை தேவையில்லை எனக் கூறுவீர்களா? எனவே, குற்றத்தின் முன் தகுதி, தராதரம் என்பது முக்கியம் அல்ல. விசாரணைக்கு எவரும் இடையூறு ஏற்படுத்தக்கூடாது - என்றார். (அ-ம-இ)

## போதைப்...

மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
சிறுப்பிட்டி கலையொளி வீதிக்கு அருகாக கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சந்தேகத்துக்கு இடமான முறையில் பயணித்தவர்களை இடைமறித்துச் சோதனையிட்டபோதே அவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களிடம் இருந்து கஞ்சா, கஞ்சா கலந்த மாவா மற்றும் போதை மாத்திரைகள் என்பன மீட்கப்பட்டுள்ளன. சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ம-23)

## உப்புமால்...

நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தினார். முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு அருகிலுள்ள உப்புமால் வீதி தற்போதும் இராணுவப் பிடியில் உள்ளது. கடற்கரைப் பகுதிகளில் இயற்கை இடர்கள் ஏற்பட்டால் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லும் வகையிலேயே இந்த வீதி அமைக்கப்பட்டுள்ளது. எனவே, உப்புமால் வீதியை விடுவிக்க வேண்டியது அவசியமாகும் - என்றார். (அ-ம)

## பயங்கரவாதத்...

தினம் போராட்டம் இடம்பெறவுள்ளது. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட பேருந்துத் தரிப்பிடத்துக்கு முன்பாக இடம்பெறவுள்ள இந்தப் போராட்டத்தில் மக்கள் பெருமளவில் பங்கேற்க வேண்டும் என்று தமிழரசுக் கட்சியினர் அழைப்பு விடுத்துள்ளனர். (அ-ம-56)

## நாகர்கோவில்...

குண்டு காணப்படுவதை அவதானித்த பொதுமக்கள் இதுதொடர்பில் மருதங்கேணிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். இதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் அங்கு ஆய்வுப் பணிகளை மேற்கொண்டதுடன், இரண்டு பொலிஸாரை பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தியுள்ளனர். சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்துக்குத் தகவல் வழங்கி அந்தக் கைக்குண்டை மீட்கும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. (அ-ம-66)

## பின்னிப்...

செம்மணிப் புதைகுழிக்குள் இருந்து கடந்த சில நாள்களாக ஏராளமான என்புத் தொகுதிகள் தொடர்ச்சியாக மீட்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான நிலையிலேயே புதைகுழியின் இருவேறு பகுதிகளில் மிகவும் சிக்கலான முறையில் பின்னிப் பிணைந்த நிலையில் ஏராளமான என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுக்கு இலக்கமிடும் பணிகளும், அவற்றை மீட்டெடுக்கும் நடவடிக்கைகளும் தற்போது இடம்பெற்று வருகின்றன.
இந்த என்புத் தொகுதிகள் மிகவும் கோர்வையான முறையில் இருப்பதால் மிகுந்த சிரமத்துக்கு மத்தியிலேயே மீட்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. அத்துடன் அண்மைக் காலமாக அடையாளம் காணப்படும் என்புத்தொகுதிகளில் கணிசமானவை சிறுவர்களின் என்புத் தொகுதிகள் என்றும் தெரியவருகின்றது. செம்மணிப் புதைகுழியின் தற்போதைய நிலைமைகளின் அடிப்படையில் பார்க்கையில் புதைகுழி மேலும் விரிவடைய வாய்ப்பு உள்ளதாகக் கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-26)

## பணயம்...

கைதிகளாக சிறை வைக்கப்பட்ட இலங்கையர்களை மீட்கும் நடவடிக்கைகள் இலங்கை மற்றும் எத்தியோப்பிய அதிகாரிகளால் கூட்டாக முன்னெடுக்கப்பட்டு வந்தன. இவ்வாறான நிலையிலேயே இலங்கையர்கள் மூவரும் தற்போது பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர் என்று இலங்கையின் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சான்றிதழ் வழங்கல்

வித்தியாதீபம் கல்வி மற்றும் தற்சார்புப் பொருளாதார மேம்பாட்டு அமைப்பின் ஏற்பாட்டில் 7ஆவது தையல் பயிற்சியை நிறைவுசெய்த மாணவிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

அமைப்பின் மாவட்டத்தலைவர் த.லிகிர்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன், சிறப்பு விருந்தினராக அயற்பாடசாலை அதிபர்கள், புலம்பெயர் அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் தையல் பயிற்சியை நிறைவு செய்த மாணவர்கள் என்.வி.க்யூ. தர சான்றிதழ்கள் மற்றும் பரிசில் பொருள்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடைபெற்ற சித்திரப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பணப்பரிசில்களும், கலந்துகொண்ட மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. கணினிப் பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. முதியோர்களுக்கான ஒரு தொகுதி உலருணவுப் பொருள்களும், இரு குடும்பங்களுக்கான வாழ்வாதர உதவியும், மாணவி ஒருவரின் கற்றல் செயற்பாட்டுக்கான உதவித்திட்டமும், தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கான பழமரக்கன்றுகளும் இதன்போது வழங்கப்பட்டன.

முள்ளியவளைப் பிரதேசத்தில் வறுமைகோட்டுக் குட்பட்ட மக்கள் தங்கள் தற்சார்புப் பொருளாதாரத்தினை மேம்படுத்தி ஊக்குவிக்கும் நோக்கில் வித்தியாதீபம் சுவீஸ் கிளையினரால் தொடர்ச்சியாக தையல் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. (எ-41-19)

## 'யாழ்பாடி இதழ் 10' ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப் பேரவையினால் வெளியிடப்படவுள்ள யாழ்பாடி இதழ் 10 கலாசார மலருக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன. யாழ்ப்பாணப் பிரதேச செயலக செயலாளர் பிரிவில் வசிக்கின்ற எழுத்தாளர்கள், கலைஞர்கள், கல்விப்புலம் சார்ந்தவர்கள், யாழ்ப்பாண பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவிலுள்ள நிறுவனங்களில் கடமையாற்றும் படைப்பாளிகள், பிரதேசத்தின் கலை, கலாசாரம், கல்வி, சமயம், வரலாறு, தொல்லியல், சமூக வாழ்வியல், தொன்மைகள், நாட்டுப்புறவியல், மரபுரிமைகள், கவிதை, சிறுகதை, ஆவணத்தரவுகள், நேர்காணல்கள், ஆன்மிகம், சிறுவர் முதியோர் பாதுகாப்பு தொடர்பான ஆக்கங்கள், போதைப்பொருளுக்கு எதிரான ஆக்கங்கள் போன்றவற்றினை வழங்கமுடியும். பிரதேசத்தின் படைப்பாளிகளுக்கு களமமைத்துக் கொடுப்பதுடன் தரவுகளை ஆவணப்படுத்தும் நோக்கிலாக இம்மலர் அமையவுள்ளது. ஆக்கங்களை வழங்க விரும்புவோர் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னதாக யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பிரிவிற்கு அனுப்பிவைக்கமுடியும். யாழ்பாடி மலர்க்குழுவின் பரிசீலனையின் பின்னர் தகுதியான ஆக்கங்கள் பிரசுரிக்கப்படுமென யாழ்ப்பாண பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவையின் தலைவருமான திருமதி சிவகாமி உமாகாந்தன் தெரிவித்துள்ளார். (ச-41)

**பணியாளர்கள் தேவை**

எமது நிறுவனத்திற்கு தினசரி பாரவூர்தியில் சென்று பொருட்களை ஏற்றி இறக்கும் (Porters) பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

ஏனையவை நிறுவனத்திற்கு நேரில் வந்து பேசித் தீர்மானிக்கலாம்.

**A.M.T Marketing & Distributors**

"அரஸ்கோ கட்டடம்",

இல.341, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:- 021 221 1211

CS(61615) J-1



துப்புரவுப் பணிக்கு முன்



துப்புரவுப் பணிக்குப் பின்

# கோப்பாய் கோமகனின் சமாதி துப்புரவு

யாழ்ப்பாணம், ஜூன் 9

கோப்பாய் கோமகன் என்று அழைக்கப்பட்ட வன்னியசிங்கத்தின் சமாதி பராமரிப்பு இன்றிக் காணப்பட்ட நிலையில், தற்போது துப்புரவு செய்யப்பட்டுள்ளது. கீரிமலையிலுள்ள குறித்த சமாதி அவரின் குடும்பத்தாரால் பராமரிக்கப்பட்டு பூசைகளும் இடம்பெற்று வந்தன. பின்னர் இந்தச் சமாதி சமயத் தொண்டு நிறுவனமொன்றுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது. எனினும் குறித்த சமாதி உரிய பராமரிப்பின்றி பற்றைக்காடாகக் காட்சியளித்தது. இந்த விடயம் தமிழரசுக்கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டதையடுத்து அவருடைய முயற்சியால் தற்போது அந்தச் சமாதி துப்புரவு செய்யப்பட்டுள்ளது. (க)

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம் 04.09.1995 மறைவு 21.05.2025

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு கடந்த (21.05.2025) புதன்கிழமை சிவபதமடைந்த எமது மகள்

**அமரர் சந்திரராசா விதுஜாம்பாள்**

ஆண்டு ஒன்று கடந்தாலும் அன்பு என்றும் மாறவில்லை,
நீங்கள் தந்த பாசம் இதயத்தில் குறையவில்லை,
நினைவுகள் தினம் வந்து கண்களை நனைக்கின்றன,
நீங்காத உங்கள் நினைவில் எங்கள் வாழ்வு
– தொடர்கின்றது...

அவர்களின் ஆண்டுத்துவச நிகழ்வுகள் இன்று (09.06.2026) செவ்வாய்க்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்

8 ஆம் கட்டை,
துர்காபுரம் மல்லாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.